**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 131/2025** |
| Prosecution witness | : | P.W. 2 |
| List of witness | : | L.W.2 |
| Name | : | காளிமுத்து |
| Father's /Husband Name | : | நடேசன் |
| Village | : | பெரும்பண்ணையூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 60 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of April 2026. Both accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரி ராஜா எனது மகன் ஆவார். ஆஜர் எதிரி பரணி எனது மருமகள் ஆவார். எனக்கு மற்றொரு மகள் உள்ளார். அவருக்கு திருமணமாகி கணவர் வீட்டில் இருந்து வருகிறார். எனது மகன் 1ம் எதிரி ராஜா 2ம் எதிரியை திருமணம் செய்துகொண்டு தனியாக வசித்து வந்தார். 1ம் எதிரி தனக்கு குடியிருக்க வீடு இல்லை கேட்டுக்கொண்டதால் எங்களது வீட்டில் தங்க அனுமதி வழங்கினோம். நாங்கள் குடியிருக்கும் வீட்டை தனக்கு கொடுக்கவேண்டும் என்று பிரச்சனை செய்து வந்தார். நாங்கள் திருவாரூர் கோட்டாட்சியரிடம் சென்று மேற்படி பிரச்சனையை தெரிவித்தேன். அவர்கள் எங்களை வீட்டில் குடியிருக்குமாறும் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்தால் தெரிவிக்க வேண்டும் என்று பேசி சமாதானம் செய்து வைத்தார். ஆனால் ஆஜர் 1ம் எதிரி அதை மதிக்காமல் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மாலை 04.30 மணியளவில் அ.சா.1ஐயும் என்னையும் வீட்டைவிட்டு வெளியேறுமாறும் சொல்லி அ.சா.1 ஐ ஆஜர் எதிரிகள் இருவரும் குச்சிக்காரி தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். 1ம் எதிரியாகிய எனது மகன் கம்பியால் அ.சா.1 ஐ இடதுபுற புருவத்தில் அடித்தார். என்னையும் ஆஜர் எதிகள் இருவரும் வாயில், தோள்பட்டையிலும்

முதுகிலும் அடித்தார்கள். அதன்பிறகு ராமசந்திரன் என்பவர் அ.சா.1 ஐ யும் என்னையும் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்துசென்றார். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.07 11:27:24 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.